# மயிலாடுதுறை மாவட்டம்

## இரண்டாம் திருப்புதல் தேர்வு பிப்ரவரி – 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | வரலாறு | மதிப்பெண்கள் : 90

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20×1=20

1) "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" - எனக் கூறியவர்

அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி

இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) பாரதியார்

2) கீழ்க்கண்டவற்றில் சரியான விடையைத் தேர்ந்தெடு

கூற்று: ஆங்கில அரசாங்கம் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றியது

காரணம்: இங்கிலாந்தின் தடையற்ற வணிகக் கொள்கையினால் இந்தியா நன்மையைப் பெற்றது

அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

ஆ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது

இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

3) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?

அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்தமடம்

ஆ) ஜி.சுப்ரமணியம் - விடிவெள்ளிக்கழகம்

இ) மிண்டோ பிரபு - பல்கலைக்கழகச் சட்டம் 1904

ஈ) தீவிர தேசியவாத மையம் – சென்னை

4) பின்வருவனவற்றை கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக

அ) சுதார் கட்சி - i. 1916

ஆ) நியூ இந்தியா - ii. 1913

இ) தன்னாட்சி இயக்கம் - iii. 1909

ஈ) மின்டோ - மார்லி சீர்திருத்தம் - iv. 1915

அ) ii, iv, i, iii ஆ) iv, i, ii, iii இ) i, iv, iii, ii ஈ) ii, iii, iv, i

5) பின்வருவனவற்றுள் எது ஒன்று சரியாகப் பொருந்தவில்லை?

அ) பஞ்சாப் துணை ஆளுநர் - 1. ரெஜினால்டு டையர்

ஆ) தலித் - பகுஜன் இயக்கம் - 2. டாக்டர். அம்பேத்கார்

இ) சுயமரியாதை இயக்கம் - 3. ஈ.வெ.ரா. பெரியார்

ஈ) சத்தியாகிரக சபை - 4. ரௌலட் சட்டம்

6) இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது?

அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930 இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

7) முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் - அரக்கோணம் ஆ) பம்பாய் - பூனா
இ) பம்பாய் - தானே ஈ) கொல்கத்தா - ஹூக்ளி

8) 1937 இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது
அ) 12 மாகாணங்கள் ஆ) 7 மாகாணங்கள்
இ) 5 மாகாணங்கள் ஈ) 8 மாகாணங்கள்

9) இந்திய தேசிய இராணுவப் படை வீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார்?
அ) ஜவஹர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு இ) இராஜாஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

10) 1945 இல் சிம்லா மாநாட்டைக் கூட்டிய அரசபிரதிநிதி
அ) வேவல் பிரபு ஆ) லின்லித்கோ பிரபு
இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) கிளமண்ட் அட்லி

11) ஆந்திர மாநில கோரிக்கையினை முதன்முதலில் எழுப்பியர்
அ) பொட்டி ஸ்ரீராமுலு ஆ) பட்டாபி சீத்தாராமையா
இ) கே.எம். பணிக்கர் ஈ) டி.பிரகாசம்

12) பின்வருவனவற்றைப் பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

| | | |
|---|---|---|
| அ) ஜேவிபி குழு | - | 1. 1928 |
| ஆ) சர் சிரில் ராட்கிளிஃப் | - | 2. மாநில மறுசீரமைப்பு ஆணையம் |
| இ) பசல் அலி | - | 3. 1948 |
| ஈ) நேரு குழு அறிக்கை | - | 4. எல்லை வரையறை ஆணையம் |

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 4, 2, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 4, 2, 3, 1

13) இந்திய அரசாங்கம் ______ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது
அ) முதலாளித்துவ ஆ) சமதர்ம இ) தெய்வீக ஈ) தொழிற்சாலை

14) பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர்லால் பகுகுணா

15) கீழ்க்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது?
அ) மறுமலர்ச்சி ஆ) சமயச்சீர்திருத்தம்
இ) புவியியல் கண்டுபிடிப்பு ஈ) வர்த்தகப் புரட்சி

16) பதினாறாம் லூயியின் அதிகாரபூர்வமான வசிப்பிடமாக இருந்தது
அ) வெர்செய்ல்ஸ் ஆ) தெலவன் இ) மார்செய்ல்ஸ் ஈ) டியூலெர்ஸ்

17) "இரு உலகங்களின் நாயகன்" என கொண்டாடப்பட்டவர் ______ ஆவார்
அ) சார்லஸ் ஆல்பிரட் ஆ) பிஸ்மார்க் இ) மூன்றாம் நெப்போலியன் ஈ) கரிபால்டி

18) எந்த நாடு 21 நிர்பந்தங்களை புதிதாக உருவாக்கப்பட்ட சீன குடியரசின் தலைவர் முன் சமர்ப்பித்தது?
அ) பிரான்ஸ் ஆ) ரஷ்யா இ) ஜப்பான் ஈ) பிரிட்டன்

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



19) கீழ்க்கண்டவற்றில் சரியான விடையைத் தேர்ந்தெடு

கூற்று: இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர் முறைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்தன

காரணம்: அகழிப்போர் முறை ஒதுக்கப்பட்டு விமான குண்டு வீச்சு பிரபலமானது

அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

ஆ) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

20) கிளாஸ்நாஸ்ட் குறிப்பது

அ) ஒளிவு மறைவற்ற வெளிப்படைத் தன்மையை

ஆ) சோவியத் கம்யூனிச கட்சியை ஜனநாயகப்படுத்தப்படுவதை

இ) சோவியத் ஐக்கிய பாராளுமன்றம் மறுகட்டமைப்புச் செய்யப்படுவதை

ஈ) பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் புத்துயிர் அளிப்பதை

பகுதி - II

**II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.**

**அவற்றில் வினா எண்.30-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **7×2=14**

21) இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.

22) மிதவாதிகளின் "இறைஞ்சுதல் கொள்கை" என்றால் என்ன?

23) பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா குறித்து எழுதுக.

24) தனித்தொகுதி முறையினை பற்றி எழுதுக.

25) ஜேவிபி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?

26) சமதர்ம சமூக அமைப்பு என்பதைப் பற்றி நீ அறிந்தென்ன?

27) பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.

28) ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக

29) பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதன் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி எழுதுக.

30) இந்தியப் பிரிவினையில் ராட்கிளிஃபின் பங்கு யாது?

பகுதி - III

**III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு குறுகிய விடையளிக்கவும்.**

**அவற்றில் வினா எண்.40-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **7×3=21**

31) இந்திய நிர்வாகச் செலவின விவரங்களை கூறுக.

32) தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.

33) ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.

34) சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?

35) இந்திய தேசிய காங்கிரசிலிருந்து சுபாஷ் சந்திரபோஸ் நீக்கப்பட்டதற்கானக் காரணங்களை விளக்குக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



36) இந்தியாவில் பசுமைப்புரட்சியின் விளைவுகள் யாவை?

37) மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?

38) பிரான்ஸ் தும்மினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் - தெளிவுபடுத்துக.

39) சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக.

40) ஜப்பான் மீதான அணுகுண்டு தாக்குதல் ஏற்படுத்திய பாதிப்புகளை குறிப்பிடுக.

## பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×5=35

41) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்றக் காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க (அல்லது)

ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

42) அ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக. (அல்லது)

ஆ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்திய சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி?

43) அ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது? (அல்லது)

ஆ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.

44) அ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.(அல்லது)

ஆ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதை விவரி?

45) அ) முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக. (அல்லது)

ஆ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

46) அ) ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது? (அல்லது)

ஆ) இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் ஐந்து இடங்களைக் குறிக்கவும்.

1. வேதாரண்யம் 2. கல்கத்தா 3. அமிர்தசரஸ் 4. சௌரிசௌரா 5. பூனா

47) அ) இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக. (அல்லது)

ஆ) முதல் உலகப்போரில் ஏதேனும் ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோடு காட்டி வரைக.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com